பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 24 ஞாயிற்றுக்கிழமை 12.11.2023 அதிர்வு 104

## பாடசாலைக்குள் பொலிஸார்: ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பு

நாடு முழுவதும் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கத் தவறிய பொலிஸாரை, பாடசாலைகளுக்குள் வரவழைத்து, மாணவர்களை உள்ளடக்கி புதிய சமூக புலனாய்வுப் பிரிவை நிறுவும் பாதுகாப்பு அமைச்சின் திட்டத்துக்கு 04

# அரசு மீது மக்கள் நம்பிக்கை இழப்பு

## தேர்தல் அவசியம் என்று சந்திரிகாவும் வலியுறுத்து



"இந்த அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். அரசில் உள்ளவர்களின் நடத்தையால் ஜனாதிபதிக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. எனவே, மிக விரைவில் பொதுத் தேர்தலை ஜனாதிபதி நடத்த வேண்டும்."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தினார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


"ஊழல்வாதிகளும், மோசடியாளர்களும் அரசில் நிறைந்து காணப்படுகின்றபோது அந்த அரசில் மக்கள் எப்படி நம்பிக்கை வைப்பார்கள்?

மக்கள் ஆணையுள்ள பலமான அரசு நிறுவப்பட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி என்ற ரீதியில் பொறுப்புடன் இதனைக் கூறுகின்றேன். 04

## 2024 முற்பகுதியில் பொதுத் தேர்தல்?



2024 முற்பகுதிக்குள் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் பிரகாசமாக தென்படுகின்றது என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. 04



## திருமலையில் நில அதிர்வு!

திருகோணமலையின் பல பகுதிகளில் சிறிய அளவிலான நில அதிர்வு உணரப்பட்டுள்ளது என்று தேசிய புவிச்சரிதவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வானது 3.4 மெக்னிடியூட் அளவில் பதிவாகியுள்ளது. 04

## ஐ.சி.சி.க்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தை நாடுவோம்!

### விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் எச்சரிக்கை




இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமை நீக்கப்பட்டதன் பின்னணியில் அழுத்தம் உள்ளது எனவும், சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தை நாடவுள்ளோம் எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று சர்வதேச கிரிக்கெட் பேரவை நேற்றுமுன்தினம் இரவு அறிவித்தது.

கிரிக்கெட் நிறுவனத்தின் செயற்பாடுகள் சுயாதீனமாக நிர்வகிக்கப்படாமை, அதன் நிர்வாக செயற்பாடுகளில் அரசின் தலையீடுகள் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஐசிசி விளக்கம் அளித்திருந்தது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள விளையாட்டுத்துறை அமைச்சர், இம்முடிவு குறித்து ஐ.சி.சி. தமக்கு அதிகாரபூர்வமாக எதையும் அறிவிக்கவில்லை எனவும், முன்னறிவித்தல், விளக்கம் இன்றியே நடவடிக்கை இடம்பெற்றுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கை கிரிக்கெட் சபையின் ஊழல்மிகு அதிகாரிகளின் தலையீட்டுடன்தான் இலங்கை உறுப்புரிமையை சர்வதேச கிரிக்கெட் சபை 04

# இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் 20 லட்சம் பேருக்கு சம்பள அதிகரிப்பு!



இந்த முறை வரவு – செலவுத் திட்டத்தில் சுமார் 20 லட்சம் பேருக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி 14 லட்சம் அரச ஊழியர்கள் மற்றும் 6 லட்சம் ஓய்வூதியம் பெறுவோருக்கும் இவ்வாறு சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பில் நிதி அமைச்சு வட்டாரத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு மட்டுமன்றி அஸ்வெசும திட்டத்தின் ஊடாக நலன் பெறும் 10 லட்சம் பேருக்கு நிவாரணங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சம்பள உயர்வு சில கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வரி விதிப்பு உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகளின் மூலம் அரசின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள இந்த நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நாளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குளவி கொட்டுக்கு இலக்காகி தாயும் மகனும் உயிரிழந்தனர்!



நுவரெலியா மாவட்டத்துக்கு உட்பட்ட ஹேவாஹெட்ட பிரதேசத்தில் குளவிகள் தாக்கியதில் தாயும் மகனும் உயிரிழந்துள்ளனர்.

குடியிருப்புக்கு அருகாமையில் இருவரும் நேற்று முன்தினம் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இருவரும் ரிகில்லகஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது 59 வயதுடைய மகன் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.சிகிச்சை பெற்று வந்த 85 வயது தாயார் நேற்று உயிரிழந்தார்.

தமது வீட்டுக்கு அருகாமையில் நின்ற போது குளவி கொட்டுக்கு இலக்கான தாயை காப்பாற்ற முற்பட்ட மகனும் குளவி தாக்குதலுக்கு ஆளாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் இருவரும் ஆபத்தான நிலையில் ரிக்கிலகஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

# நீரிழிவு தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுக்கு ஏற்பாடு!

நவம்பர் 14 ஆம் திகதி உலக நீரிழிவு தினமாகும். இதனை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகம் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

இதன் ஒரு நிகழ்வாக, நீரிழிவு நோயின் தற்போதைய நிலைமையும் இதனைத் தடுப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் நாளை (13) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தில் வைத்தியர் அரவிந்தன் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார்.

நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் தற்காலிகமாக நீரிழிவு பரிசோதனை முகாம் திறந்து வைக்கப்படவுள்ளது.

15 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் 12 மணிவரை கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் நீரிழிவு தொடர்பில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. இதில் ஆறு வைத்தியர்கள் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ். வைத்தியசாலை வீதியில் கொமர்ஷியல் வங்கிக்கு அருகில் நீரிழிவு பரிசோதனை முகாம் இடம்பெறவுள்ளது. மருத்துவ பீடாதிபதி வைத்தியர் இ.சுரேந்திரகுமார் இந்த முகாமை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

# துயிலும் இல்லங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுக!

## அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் சபா குகதாஸ்

துயிலும் இல்லங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்ற மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் கோரியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவீரர் துயிலும் இல்லங்களில் அதன் வளாகத்துள் தங்குமிடங்கள் அமைத்து நிலை கொண்டுள்ள இராணுவத்தினரால் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் நினைவு தின நாடள்களிலும் பொது நினைவேந்தல் தினத்திலும் தங்களின் கவலைகள் தீர நினைவு கொள்ள முடியாது துன்பப்படுகின்றனர்.

யுத்தம் முடிந்து 14 ஆண்டுகள் கடந்தும் நினைவேந்தலில் பூரண சுதந்திரம் கிடைக்காமல் பல்வேறு இராணுவ கெடுபிடிகளுக்குள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அவதியுறுகின்றனர்.



ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்துக்கு அமைவாக நினைவேந்தல் நிகழ்வை மேற்கொள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்கிருந்தாலும் பூரண சுதந்திரம் உண்டு என கூறப்படுகிறது.

இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் நினைவேந்தல்கள் செய்ய பல்வேறு வடிவங்களில் இராணுவமும் பொலிஸாரும் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

எனவே பாதிக்கப்பட்ட மக்கள் நினைவேந்தலை உரிய இடத்தில் தங் களது பிள்ளைகள் அல்லது உறவினர் களின் உடல்கள் விதைக்கப்பட்ட அல் லது புதைக்கப்பட்ட இடங்களில் அனுஷ்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கோப்பாய் , கொடிகாமம் , எல்லங்குளம் போன்ற மாவீரர் துயிலும் இல்லங்களில் தங்குமிடங்கள் அமைத்து இருக்கும் இராணுவத்தினரை வெளியேற்றி மக்களின் நினைவேந்தலுக்கு வழி விட மாவட்ட செயலாளர் விரைந்து மாவட்ட அபிவிருத்திக் குழுவில் தீர்மானமாக எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குடியிருப்பு தடுப்பு மதில் சரிவு; 16 குடும்பங்கள் இடப்பெயர்வு!

**(மஸ்கெலியா நிருபர்)**

கடந்த சில நாள்களாக பெய்துவரும் மழையால் ஆர்.பி.கே.பிலான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா மொக்கா தோட்டத்தில் மண் சரிவு 16 குடும்பங்கள் இடப்பெயர்ந்துள்ளன.

ஆர்.பி.கே. பிலான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள மஸ்கெலியா மொக்கா தோட்ட மேற் பிரிவில் கடந்த (09) திகதி பெய்த அடைமழை காரணமாக இரண்டு தொடர் லயன் குடியிருப்பில் உள்ள 16 குடும்பங்களை சேர்ந்த 33 பேர் தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையம் பாலர் பாடசாலை ஆகிய இடங்களில் தற்காலிகமாக இடம் பெயர்ந்து உள்ளனர்.

இவர்களுக்கான அடிப்படை வசதிகளை தோட்ட நிர்வாகம் இதுவரை செய்து கொடுக்கபடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.



இது குறித்து. பல தடவைகள் தோட்ட நிர்வாகத்திடமும், மலையக அரசியல் தலைவர்களிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும், தமக்கான உரிய தீர்வு இதுவரை கிடைக்கவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றை தினம் சம்பவ இடத்துக்கு வருகை தந்த தேசிய கட்டட ஆராய்ச்சி திணைக்கள அதிகாரிகள் இடத்தை பார்வையிட்டு சென்றுள்ளனர்.

தோட்ட நிர்வாகம் பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் அதே இடத்துக்குச் செல் லுமாறு அறிவுறுத்தி உள்ளது என் றும் ஆனால் எந்த நேரத்திலும் பாதிப்பு ஏற்படலாம்என்ற அச்சத்தால்அந்தப்பகுதியில் உள்ள மக்கள் தமக் கான உரிய தீர்வை பெற்று தருமாறு சம்பந் தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத் துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜானக ரத்நாயக்கவுக்கு கொலை மிரட்டல்; குற்றச்சாட்டில் பிரதான சந்தேகநபர் கைது!

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்கவுக்கு கொலை மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டில் 42 வயதான பிரதான சந்தேகநபர் கைது செய்யப் பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபரிடம் இருந்து 12 கிராம் ஐஸ் போதைப் பொருளும் ஒரு தொகை பணமும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவால் அந்த நபர் வெல்லம்பிட்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்கவுக்கு கொலை மிரட்டல் விடுத்து பணம் பறிக்க முயற்சித்த குற்றச்சாட்டிலேயே இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தெமட்டகொடவில் குண்டுத் தாக்குதல்

போதைப்பொருள் கடத்தல்காரரும், திட்டமிட்ட குற்றவாளியுமான தெமட்டகொட ருவானின் வீட்டின் மீது இன்று குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெமட்டகொட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெமட்டகொட, வெலுவன பிரதேசத்தில் உள்ள வீட்டின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் முன் வாயிலில் இரண்டு வெடிகுண்டுகளும் தோட்டத்தில் ஒரு வெடிகுண்டும் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட தெமட்டகொட ருவன் தற்போது புஸ்ஸ உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஐ.சி.சிக்கு எதிராக...

இடைநிறுத்தியுள்ளது எனக் கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

முதலில் விளையாட்டுத்துறை அமைச்சால் நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் குழுவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்துள்ள தடையை நீக்குவதற்கு முற்படுவோம். திங்கள் நீதிமன்றத்தை நாடுவோம். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதி கிடைக்காவிட்டால் உயர்நீதிமன்றத்தை நாடுவோம்.

அதன்பின்னர் ஐ.சி.சி. விவகாரம் கருத்திற்கொள்ளப்படும். எந்த அடிப்படையில் தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது பற்றி ஆராய வேண்டும்.

இலங்கை கிரிக்கெட் சபையால் ஐந்து மாதங்களுக்கு முன்னர் ஐ.சி.சி.க்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. அரசியல் அழுத்தம் இருப்பதாக நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. அதன்பின்னர் ஐ.சி.சி. குழு இங்கு வந்து பேச்சு நடத்தியது. நாமும் தெளிவுபடுத்தினோம். பின்னர் அரசியல் தலையீடு இல்லை, இணைந்து பயணிக்கவும் என ஐ.சி.சி. கடிதம் அனுப்பியது.

ரி – 20 தொடர்பில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளது. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு நான் நடவடிக்கை எடுத்தேன். ஐ.சி.சி.க்கும் கடிதம் எழுதப்பட்டது. இதற்குப் பதில் வரவில்லை. மாறாக இலங்கை கிரிக்கெட் சபையின் அழுத்தத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி.யிடம் விளக்கம் கோரப்படும். எமது தரப்பு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு மேன்முறையீடு செய்யப்படும். அங்கு நீதி கிடைக்காவிட்டால் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவோம். தேசத்துரோகிகள் நாட்டைக் காட்டிக்கொடுத்துள்ளனர்.” – என்றார்.

### திருமலையில்...

குறித்த நிலஅதிர்வானது 1.15 மணியளவில் பதிவாகியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த நில அதிர்வால் எந்த விதமான சேதங்களும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாடசாலைக்குள்...

நாட்டின் முன்னணி ஆசிரியர் சங்கம் ஒன்று கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

பாடசாலை அமைப்பில் போதைப் பொருள்பாவனையைத்தடுக்கும்உண்மையான விருப்பம் அரசுக்கு இருக்குமானால் நாட்டுக்குள் போதைப்பொருள் வருவதைத் தடுக்கப் பணியாற்ற வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

“பாடசாலையில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்க அரசு உண்மையில் எண்ணம் கொண்டிருக்குமானால் பாடசாலைக்குள் போதைப்பொருள் வருவதைத் தடுக்கும் திட்டத்தை உருவாக்க வேண்டும். போதைப்பொருள் பாடசாலைக்குள் வருவதைத் தடுக்கும் வேலைத் திட்டத்தை இதுவரை உருவாக்க முடியவில்லை. நாட்டுக்குள் போதைப்பொருள் வருவதைத் தடுக்க முடியவில்லை. அதனால்தான் இந்த விடயங்கள் தொடர்பாக புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்கும் இந்தச் செயற்பாடுகளைப் பாடசாலையின் ஊடாக மேற்கொள்வதற்கும் நாங்கள் எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.” – என்று இலங்கை ஆசிரியர் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### 2024 முற்பகுதியில்...

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் 2025 ஆம் ஆண்டுவரை இருந்தாலும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பதால் நாடாளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் ஏற்படும் அரசியல் ரீதியிலான தாக்கங்கள் உள்ளிட்ட காரணிகளைக் கருத்தில்கொண்டே, அவசர நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, முன்கூட்டியே பொதுத் தேர்தல் நடத்தப்படுமானால் அதனை வரவேற்போம். அந்தத் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவித்துள்ளது.

### அரசு மீது மக்கள்...

பொதுத் தேர்தலைப் பிற்போட எவரும் முயற்சிக்கக்கூடாது. இந்த நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்துத் தேர்தலை நடத்தும் அதிகாரம் தற்போதைய ஜனாதிபதிக்கு உண்டு.” – என்றார்.



# வவுனியாவில் உடைப்பெடுத்த குளம்; 15 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிப்பு!

வவுனியா, ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட கோமரசங்குளம் பகுதியிலுள்ள குளம் ஒன்று உடைப்பெடுத்தமையால் அதன் கீழுள்ள 15 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் முழ்கி பாதிப்படைந்துள்ளன. குளத்தின் நீர் தொடர்ந்தும் வெளியேறிய வண்ண முள்ளது.

மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகத் தொடரும் மழையுடனான காலநிலையால் பல குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்து காணப்பட்ட நிலையில் இந்தக் குளம் இன்று காலை உடைப் பெடுத்துள்ளது.

ஊர்மக்கள்பல மணிநேரமாக குளத்தின் உடைபெடுத்த பகுதியை மண் நிரப்பி கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது பயனளிக்க வில்லை.

கோமரசங்குளம் பகுதியிலுள்ள இந்தக் குளம் நீண்ட காலமாக எவ்வித புனரமைப்பு பணிகளும் இன்றி காணப்படுகிறது. குளத்தின் கீழ் 35 ஏக்கர் வயல் நிலங்கள் காணப்படுகின்ற போதிலும் தற்போது 15 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.



# பொத்துவில் கனகர் கிராமத்தில் 73 குடும்பங்களுக்கு காணிப் பத்திரம்

(ந.குகதர்சன் )

மிக நீண்ட காலமாக மக்கள் போராட்டமாக இருந்த பொத்துவில் கனகர் கிராமத்தில் மீள்குடியேற்றப்படும் குடும்பங்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று (11) திருகோணமலையில் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான கலையரசன், முஷரப், கபில அதுகோரல, ஐ.பி.சி. தமிழ் நிறுவன பணிப்பாளர் பாஸ்கரன், பொத்துவில் பிரதேச செயலர் உள்ளிட்ட குழுவினர் கனகர் கிராமத்தில் முதல் கட்டமாக மீள்குடியேற்றப்பட்ட பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



பொத்துவில் கனகர் கிராமத்தில் பூர்வீகமாக குடியிருந்து யுத்த காலத்தில் வெளியேறிய மக்களை மீள்குடியேற்றும் முகமாக அப்பிரதேச மக்களால் பல வருடங்களாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனால் பல வருட பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பா.உ திசாநாயக்கா, பொத்துவில் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் முஷரப், கிழக்கு மாகாண ஆளுநர், பொத்துவில் பிரதேச செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்பின் காரணமாக தற்போது அம்மக்களில் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 73 குடும்பங்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மைத்திரி வழியில் ரணில்

மிகவும் குழப்பகரமான அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் தனது அடுத்த வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற கோதாவில் நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவரது தற்போதைய ஜனாதிபதி பதவிக்குரிய காலம் வரும் ஒக்டோபர் மாதத்தில் முடிவடைந்து விடும் என்பதால் இன்னொரு தடவை இப்படி நிதி அமைச்சராக நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டுமா என்பது கேள்விக்குறியே.

இப்போது கிட்டிய ஜனாதிபதிப் பதவியை வைத்துக்கொண்டு, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான -அடுத்த ஜனாதிபதி பதவிக்கான - வாய்ப்பையும் தான் தட்டிப் பறித்து கொண்டு விட வேண்டும் என்பதுதான் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டம். நப்பாசை. எதிர்பார்ப்பு. விருப்பம். எல்லாமுமே.

ஆனால், அந்த வாய்ப்பு அவருக்குக் கிட்டுமா என்பதுதான் கேள்வி.

இப்போதைய ஜனாதிபதிப் பதவியை வைத்துக் கொண்டு எதேச்சாதிகாரமாக அவர் செயற்பட்ட விதமே அவரது அடுத்த ஆட்சி வாய்ப்புக்கான சந்தர்ப்பத்தை நாசமாக்கிவிட்டது என்பதே உண்மை.

ஓர் ஆட்சிக் காலம்தான் ஜனாதிபதிப் பதவியில் இருப்பேன் என்று அறிவிப்போடு அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட, அந்த அதிகாரம் கிடைத்ததால் ஏற்பட்ட ருசி காரணமாக, அதனை இலகுவில் விட்டுவிட மனமில்லாத நிலையில், இரண்டாவது தடவையும் அதிகாரத்துக்கு வர நப்பாசைப்பட்டார். மிகக் கடுமையாக முயன்றார். கடைசியில் எல்லா வழிகளுமே அடைபட, 'எட்டாப்பழம் புளிக்கும் என்ற கதை போல' யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு, மீண்டும் அதிகாரத்துக்கு வர முயல்வது பொருத்தமற்றது என்ற நிலைமையை அனுசரித்து, மெல்ல அந்த முயற்சியில் இருந்து விலகினார்.

போகின்ற போக்கில் அந்தக் கதிதான் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்படும் என்றே தோன்றுகின்றது.

அதிகாரத்தில் - ஆட்சியில் - இருந்தபோது மைத்திரிபால சிறிசேன கூட தமது அரசுக்கு முண்டு கொடுத்த எம்.பிக்களுடன் முரண்பட்டார். ஏன் தமது அரசின் பிரதமருடன் கூட அவர் கருத்து வேறுபாடு கொண்டு முரண்டு பிடித்துச் செயற்பட்டார்.

இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் போக்கும் அப்படித்தான் இருக்கின்றது. அவருக்கு ஆதரவளித்து, அவரை ஜனாதிபதியாக்கி, அவரின் அரசுக்கு முண்டு கொடுத்து உதவி வந்த பொது ஜன பெரமுனை எம்.பிக்களுடனேயே அவருக்கு இப்போது முரண்பாடு.

அதன் வெளிப்பாடு, நாளை தனது வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த பின்னர் வெளிப்படக்கூடும்.

அத்தகைய நிலைமை ஏற்படும் போது தமது அதிகாரப் பிடியின் யதார்த்த நிலைமையை - சூழலை - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் புரிந்து கொள்வாரென எதிர்பார்க்கலாம்.

மைத்திரிபால சிறிசேன போல தமது முதல் ஜனாதிபதி பதவி காலத்துடன் ரணிலும் வீட்டுக்குச் செல்ல வேண்டி ஏற்படுமோ என்னமோ...? நிலைமை அப்படித்தான் தென்படுகின்றது...!

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொதிகள் வழங்கல்!

(நூருல் ஹுதா உமர்)

உலக உணவுத் திட்டம் அரசுடன் இணைந்து பல்வேறு வகையான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள வறிய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் உலர் உணவுகளை வழங்கும் வேலைத் திட்டத்துக்கு உதவிக் கரம் நீட்டிவருகின்றது.

அந்த வகையில், இறக்காமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 12 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 2,679 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் முதற்கட்ட நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலக திட்டமிடல் பிரவின் நெறிப்படுத்தலின் கீழ் இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். றஸ்ஸான் தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் ஒரு குடும்பத்துக்கு இரண்டு மாதங்களுக்குத் தேவையான 15 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் விஷேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஏ.அனீஸ், உலக உணவுத் திட்டத்தின் இணைப்பாளர் எஸ்.பத்மன் மற்றும் உலக உணவுத் திட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.வின்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறக்காமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல், கணக்காளர் திருமதி. பாத்திமா றிம்ஷியா அர்ஷாட், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.எம். தௌபீக், நிர்வாகக் கிராம உத்தியோகத்தர் எச்.பி.என்.யசரத்ன பண்டார, சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.எல். நௌபீர், மற்றும் இத்திட்டத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.எம். பெறோஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய பழமரங்களைக் கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக் கூடும்."

கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்





# சிங்கள பயிற்சி நெறியின் இறுதி நாள் நிகழ்வுகள்

(றாசிக் நபாயிஸ்)

கல்முனை பிரதேச செயலக மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் பூர்த்தி செய்த 150 மணித்தியாலங்களைக் கொண்ட சிங்கள மொழிப் பாடநெறிக் கான பிரியாவிடை மற்றும் இறுதி கலை, கலாசார திறன் விருத்தி நிகழ்வு வள வாளர் ஐ.எம்.அபுல் ஹசன் ஒருங் கிணைப்பில் ஆசிரியர் எம்.ஜே. எம்.தில்ஷாதின் தலைமையில் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மருதூர் கொத்தன் கலையரங்கில் நேற்று (11) நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலக கணக்காளர் கே.எம்.எஸ். அமீரலி, கௌரவ அதிதிகளாக கல்முனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜஹ்பர், மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.எம். ஹிர்பஹான், பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.எஸ்.கே. வீரசிங்க, விஷேட அதிதிகளாக கல்முனை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி. எம். பழீல், மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும் மற்றும் மருதமுனை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க செயலாளருமான பி.எம்.அறபாத் யசீன், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் போதனாசிரியர்களான ஐ.எம். அபுல் ஹஸன், ஆர்.பி. சந்துணி மகேசிகா ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.



# தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கல்





(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் காணிக் கச்சேரி நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று (11) பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கினார்.

இதில் 66 காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. நீண்ட காலமாகக் குடியிருப்புக் காணிகளுக்கான காணி அனுமதிப் பத்திரம் இன்றி வாழ்ந்து மக்கள் தற்போது காணிக்கான அனுமதிப் பத்திரங்களை பெற்றுள்ளனர்.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அதுகோரள , தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட காணிக் கிளை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# தென் கிழக்கு ஒலுவில் வளாகத்தில் நடப்பட்ட 500 நிழல்தரும் மரங்கள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக ஒலுவில் வளாகத்தில் 500 நிழல் தரும் மரங்களை நடும் திட்டம் கொமர்ஷல் வங்கியின் அனுசரணையில் இடம்பெற்றது. நிலைபெறுதகு எதிர் காலத்தை நோக்கி மரங்கள் நிறைந்த தேசம் எனும் மகுடத்தில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வங்கி உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.





# கவின் அழகுபடுத்தலில் கோட்டத்தில் முதலிடம்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் கவின் கலையுடன் கூடிய அலங்கரிக்கப்பட்ட வகுப்புக்கள் புதன்கிழமை (08) திறந்து வைக்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மிகவும் வறிய, பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் பெற்றோர்களின் பங்களிப்புடன் ஆரம்பப் பிரிவு 01 ஆம் ஆண்டின் வகுப்பாசிரியைகளான எம்.பி. பாயிஸா, திருமதி என்.எப். பைஸால், 02 ஆம் ஆண்டு வகுப்பாசிரியையான கே. ஹப்ஸா, 03 ஆம் ஆண்டு வகுப்பாசிரியையான ஏ.எஸ். ஜனுல் சஜானா, 04 ஆம் ஆண்டு வகுப்பாசிரியையான எஸ்.எச். மர்சுக்னா, 05 ஆம் ஆண்டு வகுப்பாசிரியையான ஏ.டபிள்யு. றினோஸியா ஆகியோரின் சொந்த நிதியிலிருந்தும் இவ்வகுப்பறைகள் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.



பாடசாலையின் அதிபர் எம்.எஸ். எம். ஆரிப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.மலிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். ஜஹாங்கிர், ஆசிரிய ஆலோசகர்களான யூ.கே. அன்சார், எம்.எம்.எம். றபீக், பாடசாலையின் ஸ்தாபக அதிபர் ஏ.எல்.ஏ. நாபித் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் நாஸர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிதிகள் குழுவினர், அழகுபடுத்தப்பட்ட தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான 06 வகுப்பறைகளையும் ஒவ்வொன்றாகப் பார்வையிட்டனர். அனைத்து வகுப்பறைகளும் சாய்ந்தமருது பாடசாலைகளில் உள்ள ஆரம்ப நெறி வகுப்பறைகளில் முதலிடம் பெற்ற வகுப்பறைகளாகத் தெரிவு செய்யப்பட்டன.



# தேவிபுரம் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பம்!

(எஸ். தவசிலன்)

தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 ஆம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த தமது உறவுகளை நினைந்து வருடம் தோறும் கார்த்திகை 27 மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தேசமெங்கும் அனுஷ்டிக்கப்படுவது வழமை.

அந்தவகையில் இவ்வாண்டும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மேற்கொள்ள தமிழர் தாயகப் பகுதிகள் மாத்திரமின்றி தமிழ் மக்கள் வாழும் தேசமெங்கும் தயாராகி வருகிறது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களும் தயாராகி வருகின்றன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் நேற்று (11) ஆரம்பிக்கப்பட்டன.

முன்னதாக மாவீரர்களுக்கு ஈகைச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.











# பெண்கள் வலுவூட்டல் திட்டங்களை அறிமுகம்செய்யும் கலந்துரையாடல்

(அ.அஸ்வர்)

தொழில் முயற்சி, தலைமைத்துவம் மற்றும் வலையமைப்பு மூலம் பெண்களின் பொருளாதார வலுவூட்டலுக்கான ஜெய்கா செயற்றிட்டங்களை அறிமுகப் படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் அண்மையில் அம்பாறையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் மாவட்ட செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நன்மைகள் மற்றும் எதிர்கொள்ளப்படும் நடைமுறைச் சவால்கள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அம்பாறை மேலதிக மாவட்ட செயலாளர் வி.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி. அனீஸ், ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகாமையின் பிரதிநிதி அயா யமகுச்சி, கோடா ஹிராயமா உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# சுயதொழில் முயற்சியாளருக்கு கைத்தொழில் பயிற்சி நெறிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பால் போரதீவுபற்று வெல்லாவெளி பிரதேச செயலர் பிரிவுக்கு உற்பட்ட சுய தொழில் முயற்சியாளர்களுக்கு கைத்தொழில் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஈர்க்கு கட்டு மற்றும் தும்புத்தடி உற்பத்தி பயிற்சிகளே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு சுயதொழில் முயற்சியை ஊக்குவித்து அதன் மூலம் குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் அருவி பெண்கள் வலையமைப்பால் முன்னெடுக்கப்பட்டது.







# பதவி உயர்வு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் காணி உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த எம்.ஏ.எம்.றாபி நாளை திங்கட்கிழமை முதல் (13) தனது 30 வருடகால காணி உத்தியோகத்தர் சேவையில் இருந்து தலைமைத்துவ காணி உத்தியோகத்தராக அம்பாறை மாவட்ட செயலகத்துக்குப் பதவி உயர்வு பெற்றுசெல்கிறார்.

இவர் 1993 ஆம் திகதி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் முதல் நியமனம் பெற்று அதன் பின்னர் காத்தான்குடி , நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, திருகோணமலை, சாய்ந்தமருது ஆகிய பிரதேச செயலகங்களில் கடமையாற்றியுள்ளார்.

உத்தியோகத்தரின் பதவி உயர்வுக் கடிதம் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃபிகா தலைமையில் நேற்று முன்தினம் (10) பிரதேச செயலக த்தில் வைத்து வழங்கப் பட்டது.






# சமாதான விழிப்புணர்வு ஓவிய போட்டி!

(ஹஸ்பர்)

மூதூர் வலயக் கல்வி அலுவலக பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சமாதான விழிப்புணர்வு ஓவியப் போட்டி நேற்று (11) அல்ஹிதாயா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த ஓவியப்போட்டியில் 85 மாணவர்கள் கலந்து கொண்டதோடு அவர்களை வழிப்படுத்த பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# கேகாலையில் தமிழ் பாடசாலையில் கனேடிய தமிழர் பேரவை நிதியில் கட்டடம்





கேகாலை தெஹியோவித்த தமிழ் மகா வித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூட கட்டடத்துக்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் (10) வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமாகிய மனோ கணேசன், கனேடிய தமிழர் பேரவையின் இலங்கைக்கான மனிதாபிமான திட்டங்களின் இணைப்பாளர் துஷ்யந்தன் துரைரட்ணம் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கனேடிய தமிழர் பேரவையின் இலங்கைக்கான மனிதாபிமான திட்டங்களின் இணைப்பாளர் துசியந்தன் துரைரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில்–

இந்த பணிக்காக நன்கொடை வழங்கி உதவிய அனைத்து கனடியர்கள் மற்றும் அமெரிக்க தமிழர்களுக்கு கனடிய தமிழர் பேரவையின் சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

இந்தக் கட்டடத்தின் முதலாவது தளநிர் மாணத்துக்குத் தேவையான நிதியைதிரட்டும் விதமாக கடந்த செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி கனேடிய தமிழர் பேரவையால் நிதிசேர் நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது.

தெஹியோவித்த தமிழ் மகாவித்தியாலயம் மண் சரிவு காரணமாக 2016 ஆம் ஆண்டு மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டது. கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அபாயமான சூழ்நிலையை உருவாக்கியது. இதன் காரணமாக பாடசாலை தொடர்ந்து அதே இடத்தில் இயங்குவதற்கு பாதுகாப்பானது அல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் பிறகு இலங்கை அரசு பாடசாலையின் அமைவிடத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் பாதுகாப்பான நிலம் வழங்கியிருந்தது.

இந்தத் திட்டத்திற்கான மொத்த செலவு கனேடிய டொலர் ஒரு லட்சத்துக்கும் அதிகமாகும். அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடம், தளபாடங்கள் மற்றும் ஆய்வு கூட உபகரணங்கள் என அனைத்தும் அதனுள் அடங்கும். அத்துடன் இந்த கட்டட நிர்மாணப் பணிகள் 2024 பெப்ர வரியில் நிறைவடையும் –என்றார்.



# கல்முனையில் வைத்திய முகாம்!






(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர் மாணவர் அமைப்பான ஸஹிரியன் 90 அமைப்பினர் ஒழுங்கு செய்திருந்த மருத்துவ பரிசோதனை முகாமும், அமைப்பினரின் 2023 ஆண்டுக்கான ஒன்று கூடல் நிகழ்வும் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றன.

ஒவ்வொரு வருடமும் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வில் ஸஹிரியன் 90 அணியில் ஒன்றாக ஒரே வகுப்பில் கல்வி கற்று நாட்டில் நாலாபுறமும் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்களாக கடமையாற்றும் வைத்திய நண்பர்கள் இந்த பரிசோதனையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.




# மக்கள் வங்கியில் 25 வருட சேவையாற்றிய 886 பணியாளர்களுக்குத் தங்க விருதுகள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாடு தழுவிய ரீதியில் மக்கள் வங்கியில் 25 வருட சேவையை பூர்த்தி செய்து வெள்ளி விழா கண்ட 886 பணியாளர்களுக்கு தங்க விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த விருது வழங்கும் விழாவில் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான கிளைவ் பொன்சேகா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தங்க விருது வழங்கும் விழாவில் மொத்தம் 886 பணியாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். மக்கள் வங்கியில் அவர்களின் குறிப்பிடத்தக்க 25 வருட சேவையை நினைவுகூரும் வகையில் அவர்களுக்கு மதிப்புமிக்க தங்க விருதுகள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கு மேலதிகமாக, 40 வருட தொடர்ச்சியான சேவையை நிறைவு செய்த 52 சிரேஷ்ட ஊழியர்களுக்கும் விசேட நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

1986 ஆம் ஆண்டு முதல் பாரம்பரியமாக இருந்துவரும் இந்த சேவை பாராட்டு விழா, இலங்கையின் நிதித்துறையில் வங்கியை ஒரு மைல்கல்லாக நிலை நிறுத்த அயராது பங்களித்த மக்கள் வங்கி ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பின் சான்றாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






सत्यमेव जयते
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
நல்லதோர் குடும்பம்
சிறப்புரை
திரு. மோகனசுந்தரம்
நகைச்சுவை பேச்சாளர்
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 18 நவம்பர் 2023 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 05.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
+94 703 563213
+94 21 222 8358
www.jride.lk
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
நாங்கள் தயார் நீங்கள் தயாரா?
WE ARE READY ARE YOU READY?
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள். இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்




AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882




# தீபாவளித் திருநாளில் தீய குணத்தை அழிப்போம்...!

■ நடராஜன் ஹரன்

தீபாவளி , ஐப்பசி மாதம் அமாவாசை அன்று கொண்டாடும் ஓர் இந்து பண்டிகையாகும் . இந்துக்கள் மட்டுமின்றி சீக்கியர்களும் , சமணர்களும் கூட இப் பண்டிகையை வெவ்வேறு காரணங் களுக்காக கொண்டாடுகின்றனர் .

**பெயர் வரக்காரணம்**

'தீபம்' என்றால் ஒளி , விளக்கு. வளி என்றால் வரிசை. வரிசையாய் விளக் கேற்றி , இருள் நீக்கி , ஒளிதரும் பண்டி கையே தீபாவளி ஆகும் .

தீபத்தில் பரமாத்மாவும் , நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம். ஒவ்வொருத்தர் மன திலும் ஒரு சில இருட்டு உள்ளது . அகங் காரம், பொறாமை, தலைக்கனம் போன்ற எதையாவது ஒன்றை அகற்ற வேண் டும் . ஒரு தீயகுணத்தை எரித்துவிட வேண்டும் .

**தோற்ற மரபு**
**இந்துக்களின் தீபாவளி**

இந்துக்கள் திபாவளி கொண்டாடுவ தற்கு பல காரணங்களை, புராணக் கதைகளின்வழியாகக் கூறுகின்றனர் .

புராணக் கதைகளின் படி , கிருஷ்ண னின் இரு மனைவியருள் ஒருவரான நிலமகளுக்கு பிறந்த மகன் ஒரு அசு ரன் . அப்போது கிருஷ்ணன் வராக ( பன்றி ) அவதாரம் எடுத்திருந்தான் . பிறந்த அசுரனின் பெயர் நரகன் . அந்நரகன் , தன் அன்னையால் மட் டுமே தனக்கு இறப்பு ஏற்பட வேண்டும் என்று வரம் வாங்கியிருந்தான். அவ னின் அநீதிகளை நிறுத்த வேண்டி , கிருஷ்ணன் தனது திறமையால் அந்நர காசுரனை இறக்க வைக்கிறான் .

கிருஷ்ணர் , நரகாசுரன் என்ற அசுர னைக் கொன்ற போது , அவன் தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்று கேட்ட வரத்துக்க இணங்க தீபாவளி மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுகின்றது .

இராமாயண இதிகாசத்தில் , இராமர் , இராவணனை அழித்து விட்டு , தனது வனவாசத்தையும் முடித்து விட்டு , மனைவி சீதையுடனும் சகோதரன் இலட்சுமணனுடனும் அயோத்தி திரும் பிய நாளை , அயோத்தி மக்கள் ஊரெங் கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்த னர் . இந்நாளே தீபாவளியாக கொண்டா டப்படுவதாகவும் கருதப் படுகிறது .

ஸ்கந்தபுராணத்தின் படி, சக்தியின் 21 நாள் கேதார விரதம்முடிவுற்றது இத்தினத்தில்தான். விரதம் முடிவடைந்த பின்னர் சிவன், சக்தியை தன்னில்ஒரு பாதியாக ஏற்று ' அர்த்தநாதீஸ்வரர' உருவமெடுத்தார்.

தீபாவளி அன்று அனைவரும் அதி காலையில் எழுவர். இல்லத்தின் மூத்த உறுப்பினர் ஒவ்வொருவர் காலிலும் நலங்கு (மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த கலவை ) இட்டுமகிழ்வர். பின் எண் ணெய்க் குளியல் ( கங்கா குளியல் ) செய்வர். நல்லெண்ணெயில் ஓமம் மற் றும் மிளகு போட்டுக் காய்ச்சுவது சில ரது வழக்கம். மக்கள் புத்தாடை உடுத்தி யும் பட்டாசுகள் வெடித்தும் மகிழ்வர் .

பொதுவாகத் தீபாவளியன்று பாரம் பரிய உடைகளை அணியவே பெரும் பாலான மக்கள் விரும்புகின்றனர் . அன்று அநேக பெண்கள் புடைவையும் (குறிப்பாக பட்டுப் புடைவை) ஆண்கள் வேட்டியும் உடுப்பர் . தீபாவளி அன்று ஒவ்வொரு இல்லத்திலும் மங்கள இசையான நாதசுவரம் ஒலிக்கும் . அன்று இனிப்புக்கள் நிறைய செய்து ஒரு வருக்கொருவர் பரிமாறிக்கொள்வர் .

**தீபாவளியின் போது**
**செய்ய வேண்டிய செயல்கள்**

குளிப்பதற்கு முன்பு, எண்ணெய் மசாஜ் செய்ய வேண்டும், ஏனெனில் இது நிதி இழப்புகளைத் தடுக்கிறது என்று கருதப்படுகிறது.

உங்கள் பரம்பரைக்கு மரியாதை செலுத்துவதற்கு முன்னோர்களின் வணக்கம் செய்யப்பட வேண்டும். பிர தோஷ காலத்தின் போது, ஆவிகள் வழிகாட்டவும், அவர்களுக்கு சொர்க்கத் துக்கு ஏற உதவவும், அதன் பிறகு நிம்மதியாக ஓய்வெடுக்கவும் விளக்குகள் எரிய வேண்டும்.

தீபாவளிக்கு முந்தைய நள்ளிரவு கொண்டாட்டம் வீட்டிலிருந்து வறுமையை அகற்ற உதவுகிறது.

**பூஜை சடங்குகள்**

லட்சுமி பூஜை தீபாவளியின் மிகப் பெரிய அம்சமாகும். இந்த புனித நாளில், லட்சுமி தேவி, விநாயகர் மற்றும் சரஸ்வதி தேவி ஆகியோர் மாலை மற் றும் இரவு நேரங்களில் போற்றப்படுகி றார்கள். புராணங்களின்படி, லட்சுமி தேவி பூமிக்கு இறங்கி, ஒவ்வொரு வீட் டையும் பார்வையிடுகிறார். எந்தவொரு வீடும் நேர்த்தியான மற்றும் காலம், தெய்வத்தால் வசிக்கத் தேர்ந்தெடுக்கப் படுகிறது, எனவே லக்ஷ்மி தேவியைப் பிரியப்படுத்தவும், அவரது தெய்வீக ஆசீர்வாதங்களை அனுபவிக்கவும் இந்த சரியான தருணத்தில் வீட்டை முறையாக சுத்தம் செய்து விளக்கு ஏற்றி வழிபாடு செய்யப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. தீபாவளி பூஜை செய்யும்போது பின்வரும் புள்ளிகள் பரிசீலிக்கப்பட வேண்டும்.

1.வீட்டை சுத்தம் செய்து, லக்ஷ்மி பூஜைக்கு முன் தூய்மையின் சாரத்துக் காக புனித கங்கா ஜால் தெளிக்கவும். மெழுகுவர்த்திகள், களிமண் விளக்குகள் மற்றும் கோலங்களால் வீட்டை அலங் கரிக்கவும்.

2. ஒரு பூஜைக்காக பலகை உரு வாக்கவும். அதன் மேல் ஒரு சிவப்பு துணி யைப் பரப்பி, லக்ஷ்மி தேவி மற்றும் விநாயகர் சிலைகளை அதன் மேல் வைக்கவும். இரண்டின் படத்தையும் ஒரே நோக்கத்துக்காகப் பயன்படுத்த லாம். பலகை அருகே தண்ணீர் நிரப் பப்பட்ட ஒரு கலாஷை வைக்கவும்.

3. லட்சுமி தேவி மற்றும் விநாயகர் மீது மஞ்சள் மற்றும் குங்குமம் போட்டு வைக்கவும். ஒரு விளக்கு (களிமண் விளக்கு) ஏற்றி, சந்தனம், அரிசி, மஞ் சள், குங்குமப்பூ, அபீர், குங்குமம் போன் றவற்றை வைத்து உங்கள் பக்தியை வழங்குங்கள்.

4. லட்சுமி பூஜைக்குப் பிறகு, சரஸ் வதி, காளி தேவி, விஷ்ணு மற்றும் குபேர் ஆகியோரை வணங்குவது சடங் குகளின் போது செய்யப்படுகிறது.

5. பூஜை விழாக்கள் குடும்ப உறுப்பி னர்கள் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து செய்யப்பட வேண்டும்.

6. லட்சுமி பூஜையைத் தொடர்ந்து, புத்தகங்கள், கழிப்பிடங்கள், வணிகம் அல்லது செல்வம் தொடர்பான பிற உப கரணங்களுக்கு மரியாதை செலுத் தலாம்.

7. பூஜை முடிந்ததும், இனிப்புகள் மற்றும் பிரசாதம் விநியோகம், தேவைப் படுபவர்களுக்கு தொண்டு போன்ற நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும்.

பெரியோரை வணங்கி வாழ்த்து பெறுவர் . தீபாவளி இலேகியம் (செரி மானத்திற்கு உகந்தது) அருந்துவதும் மரபு . தீபாவளியன்று நீராடுவதை மட் டும் புனித நீராடல் என்று சொல்வதற்கு காரணம், அன்றைய தினம் , அதி காலையில் எல்லா இடங்களிலும் , தண் ணீரில் கங்கையும் , எண்ணெயில் லட் சுமியும் அரப்பில் சரஸ்வதியும் , குங்கு மத்தில் கௌரியும் , சந்தனத்தில் பூமா தேவியும் , புத்தாடைகளில் மஹா விஷ் ணுவும் வசிப்பதாகக் கருதப்படுவதே யாகும். அந்த நீராடலைத்தான் 'கங்கா ஸ்நானம் ஆச்சா' என்று ஒருவருக் கொருவர் விசாரிப்பர் . அன்றையதினம், எல்லா நதிகள் , ஏரிகள் , குளங்கள் , கிணறுகளிலும் , நீர்நிலைகளும் 'கங்கா தேவி' வியாபித்து இருப்பதாக ஐதீகம்.

தீபாவளி இந்துப் பண்டிகையாய் இருந்தாலும், அனைவரும் ஒற்றுமை யாய் கொண்டாடும் பண்டிகை தீபாவளி. தீபம் என்றால் வெளிச்சம். ஒவ்வொருத்தர் மனதிலும் ஒரு சில இருட்டு உள்ளது. அகங்காரம், பொறாமை, தலைக்கனம் போன்ற எதையாவது ஒன்றை தூக் கிப்போட வேண்டும். ஒரு தீய குணத்தை எரித்துவிட வேண்டும் இத் தீபத் திருநாளில் நாம் அனைவரும் எமது இருளை அகற்றி மனதில் புத்தொளியை ஏற்றி எதிர்காலத்தை வசப்படுத்துவோம். தீபாவளி இந்துப் பண்டிகையாக இருந் தாலும், அனைவரும் ஒற்றுமையாய் கொண்டாடும் பண்டிகை தீபாவளி.



# சுரங்கப் பாதை திடீரென்று இடிந்ததால் நாற்பது தொழிலாளர்கள் சிக்குண்டனர்

## உத்தரகாண்டில் சம்பவம் மீட்புப் பணி துரிதம்

உத்தரகாண்ட் மாநிலத்தின் உத்தர காசியில் இருந்து யமுனோத்ரி தாம் நகருக்கு யமுனோத்ரி தேசிய நெடுஞ் சாலை அமைக்கும் பணிகள் நடை பெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதி யாக சில்க்யாரா – தண்டல்ஹன் பகு தியை இணைக்கும் வகையில் மலையில் 4 கிலோமீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இன்று அதிகாலை 4 மணியளவில் அப்பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதில், 40 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தனர். அப்போது, சுரங்கப்பாதையின் 150 மீட்டர் தொடக் கப்பகுதி திடீரென இடிந்து விழுந்தது. இதனால், சுரங்கத்திற்குள் வேலை செய்துகொண்டிருந்த 40 தொழிலாளர் களும் உள்ளேயே சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து விரைந்து வந்த தேசிய, மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் சுரங்கத் திற்குள் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விபத்தில் இதுவரை உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. அதேவேளை, சுரங்கத்திற்குள் சிக்கியுள்ள 40 தொழிலாளர்களின் நிலை என்ன என்பது இதுவரை தெரியாத நிலையில் மீட்புப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.



# இவ்வாண்டும் இராணுவத்தினருடன் தீபாவளியைக் கொண்டாடும் மோடி

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இராணுவ வீரர்களுடன் தீபாவளியைக் கொண்டாட ஹிமாச்சல் பிரதேசம் சென்றார். பிரதமராக பொறுப்பேற்ற 2004 முதல் 10ஆவது ஆண்டாக மோடி இராணுவ வீரர்களுடன் இன்று தீபாவளியை கொண்டாடுகிறார்.

ஒவ்வாரு ஆண்டும் காஷ்மீர், சீன எல்லை, பாகிஸ்தான் எல்லை பகுதிகளுக்குச் சென்று, அங்கு பாதுகாப்புப் பணியில் இருக்கும் வீரர்களுடன் தீபாவளியைக் கொண்டாடும் பிரதமர் மோடி இன்று ஹிமாசல்பிரதேசம் லெப்சா சென்றடைந்தார். இவரை இராணுவ மேஜர், கமாண்டர்கள் வரவேற்றனர்.

முன்னதாக நாட்டு மக்களுக்கு தீபாவளி வாழ்த்து தெரிவித்து வெளியிட்ட செய்தியில், எல்லா மக்களும் வாழ்வும், செழிப்பும் பெற்று ஆரோக்கியத்துடன் வாழத் தாம் வாழ்த்துகிறார் எனப் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

# வங்கக் கடலில் உருவாகிறது காற்றழுத்த தாழ்வு மண்டலம்

வங்கக் கடலில் நாளை மறுதினம் 14 ஆம் திகதி குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிறது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அது, நவம்பர் 16ஆம் திகதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், 14, 15 ஆம் திகதிகளில் கடலோர ஆந்திரா, தென் தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் இடி, மின்னலுடன் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

14, 15 ஆம் திகதிகளில் மணிக்கு 55 கி.மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.







# 22.23 லட்சம் அகல் விளக்குகள் ஏற்றி அயோத்தியில் தீபாவளி ‘தீபோத்ஸவ்’!

உத்தர பிரதேச முதல் அமைச்சராக யோகி ஆதித்யநாத் கடந்த 2017 ஆம் ஆண்டு பதவியேற்றவுடன், தீபாவளி பண்டிகைக்கு முதல் நாள், ‘தீபோத்ஸவ்’ எனப்படும் தீபத் திருவிழாவை அறிவித்தார். அந்த ஆண்டு, அயோத்தி நகரின் சரயு நதிக்கரையில் 51 ஆயிரம் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டன.

தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு 4.10 லட்சம் விளக்குகள், 2020ஆம் ஆண்டு 9 லட்சத்துக்கும் அதிகமான விளக்குகள் ஏற்றப்பட்டன. கடந்த 2022 ஆம் ஆண்டு அயோத்தியில் 15 லட்சத்திற்கும் அதிகமான அகல் விளக்குகள் ஏற்றப்பட்டு கின்னஸ் சாதனை படைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த ஆண்டு தீபாவளிக்கு முந்தைய நாளான நேற்று அயோத்தியில் 22.23 லட்சம் அகல் விளக் குகள் ஏற்றப்பட்டு புதிய உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்த தீபத் திருவிழாவில் ஏராளமானோர் கலந்துகொண்டு அகல் விளக்குகளை ஏற்றி வைத்தனர்.



# 80 இந்திய மீனவர்களை விடுவித்தது பாகிஸ்தான்

பாகிஸ்தானில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் மற்றும் வெளிநாட்டினரை வெளியேற்றும் நடவடிக்கையில் அந்த நாட்டு அரசு ஈடுபட்டு வருகிறது. அந்த நடவடிக்கையின் ஒருபகுதியாக கராச்சி மாலிர் சிறையில் இருந்த 80 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் அரசு நேற்று விடுதலை செய்து உத்தரவிட்டது.

விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் அல்லாமா இக்பால் எக்ஸ்பிரஸ் ரெயிலில் பலத்த பாதுகாப்புடன் ஏற்றி வைக்கப்பட்டு உள்ளனர். இன்று அவர்கள் லாகூர் சென்றடைகிறார்கள். அங்கிருந்து வாகா எல்லையில் இந்திய அதிகாரிகளிடம் அவர்கள் ஒப்படைக்கப்படுவார்கள்.

# இஸ்ரேல் இராணுவம் சுற்றிவளைத்ததால் காசா வைத்தியசாலை செயலிழந்தது!

## அதன் வளாகத்தில் 20 ஆயிரம் பொதுமக்கள் தஞ்சம்

டெல் அவிவ்,நவ.12

வடக்கு காசா பகுதியில் அமைந்துள்ள பெரிய, அல்-ஷிபா மருத்துவமனை மீது இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து தாக்குதலைத் தீவிரப்படுத்தி வருகிறது. இஸ்ரேல் இராணுவ வீரர்கள், இந்த மருத்துவமனையை நாலாபுறமும் சுற்றி வளைத்து விட்டனர் என டாக்டர் அஷ்ரப் அல்-குவித்ரா கூறுகிறார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான மோதல் ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து நீடித்து வருகிறது. அல்-ஷிபா மருத்துவமனை மீது இஸ்ரேல்ஈராணுவம் தொடர்ந்து தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது.

இதனால், அந்த மருத்துவமனையில் மருத்துவ சேவை வழங்கப்படவில்லை. இதன் தொடர்ச்சியாக நோயாளிகள் சிகிச்சை கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.

இதுபற்றி ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள சுகாதார அமைச்சகத்தின் இயக்குநர் ஜெனரலான, டாக்டர் முனீர் அல்-பர்ஷ் கூறும்போது, இந்த பகுதியில் உள்ள மருத்துவமனையில், இஸ்ரேல் இராணுவத்தின் தொடர் தாக்குதலால் சேவை நிறுத்தப்பட்டு விட்டது.



இதில், குழந்தைகளுக்கான வார்டில் 3 குழந்தைகள் உயிரிழந்து விட்டன. இதனால், 36 குழந்தைகள் உள்ள இந்தப் பிரிவில் கைகளால் செயற்கை சுவாசம் அளிக்க, டாக்டர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என கூறினார்.

இதில் ஹமாஸ் அமைப்பினரால் நடத்தப்படும் சுகாதார அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளரான டாக்டர் அஷ்ரப் அல்-குவித்ரா கூறும்போது, இந்த மருத்துவமனையை இஸ்ரேல் இராணுவ வீரர்கள் நாலாபுறமும் சுற்றி வளைத்து விட்டனர் என்றார். 400 பேர் சிகிச்சை பெறும் நிலை யில், புலம்பெயர்ந்த 20 ஆயிரம் பேர் மருத்துவமனை வளாகத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து, மருத்துவமனையில் இருந்து வெளியேற முடியாமல் தாம் சிக்கி கொண்டார் எனவும் ஐ.சி.யூ., ஆக்சிஜன் உபகணரங்கள் பணியை நிறுத்தி விட்டன எனவும் குவித்ரா கூறுகிறார்.

# இஸ்ரேல் வசமே காசா இருக்கும்!

## நேதன்யாகு அறிவிப்பு

இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர் தொடங்கி ஒரு மாதம் கடந்து விட்டது.

நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் இஸ்ரேல் தாக்குதலில் 4 ஆயிரம் குழந்தைகள் உட்பட சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்து விட்டனர் எனப் பாலஸ்தீன சுகாதார துறை அறிவித்தது.

ஆனால், இந்த எண்ணிக்கையை மறுத்துள்ளார் இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு.

போருக்கு பின்னர் காசாவின் நிலை குறித்து அவர் கூறியவை வருமாறு:-

எந்த உயிரிழப்பும் துரதிர்ஷ்டவசமானதுதான். பாலஸ்தீனம் கூறும் எண்ணிக்கையில் 10 ஆயிரம் பேரில் பலர் பாலஸ்தீன ஹமாஸ் போராளிகள். மேலும் காசா பொதுமக்களை மனித கவசங்களாக ஹமாஸ் பயங்கரவாதிகள் பயன்படுத்துவதால் உயிரிழப்புகள் அதிகமாகிறது.

ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் வரை போர் தொடரும். போர் நிறைவடைந்ததும் காசா முனை பகுதியின் பாதுகாப்பு பொறுப்பை முழுமையாக இஸ்ரேல் எடுத்து கொள்ளும். எத்தனை நாள் வரை எனும் கால அளவை தற்போது கூற முடியாது. இந்த பொறுப்பை நாங்கள் தவிர்த்தால் மீண்டும் ஹமாஸ் பயங்கரவாதம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தலைதூக்கி விடும். அதை விட மாட்டோம்.

தற்போது போர் நடைபெற்று வரும் காசா பகுதியில் உள்ள பாலஸ்தீன பொதுமக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகள் கிடைக்கவும், பணய கைதிகள் மற்றும் வெளிநாட்டினர் வெளியேறவும் போருக்கு இடையில், ஒரு மணி நேர அல்லது அரை மணி நேர சிறு சிறு இடைநிறுத்தங்களை கொடுக்கலாம். அது கூட சூழ்நிலையை நாங்கள் முற்றிலும் ஆய்வு செய்த பிறகுதான் வழங்கப்படும்.

ஆனால், போர் நிறுத்தம் அல்லது தற்காலிக இடைநிறுத்தம் போன்ற பேச்சுக்களுக்கே இடமில்லை. - என்றார் அவர்.

# தீபாவளி நாளைக் கொண்டாடினார் அமெ. துணை அதிபர் கமலா ஹாரிஸ்

வொஷிங்டன்,நவ.12

அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் வாஷிங்டனில் உள்ள தனது அரசு இல்லத்தில் தீபாவளி பண்டிகையை கொண்டாடி னார். இந்திய வம்சாவளியான கமலா ஹாரிஸ் விடுத்த அழைப்பின் பேரில் 300க்கும் அதிகமான விருந்தினர்கள் இந்த தீபாவளி கொண்டாட்டத்தில் பங்கேற்றனர். அவர்களில் பெரும்பாலானோர் இந்திய வம்சாவளியினர் ஆவர். விருந்தினர்கள் மத்தியில் உரையாற்றிய கமலா ஹாரிஸ் -

"இஸ்ரேல்- ஹமாஸ் இடையே போர் நடைபெறும் சூழலில், உலகம் எதிர்க்கொண்டிருக்கும் இருண்ட மற்றும் கடினமான நிலைக்கு ஒளி ஏற்படுத்தும் வகையில் தீபங்களின் பண்டிகையான தீபாவளியை கொண்டாடுவது முக்கியம்" என தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "இருளை விலக்கி ஒளியை ஏற் படுத்துவதாக, இந்த தீபாவளி அமையட்டும். பாலஸ்தீனத்தில் மக்கள் அடைந்து வரும் துயரம் மாற வேண்டும். அதே நேரம், இஸ்ரேல் தன்னை தற்காத்துக் கொள்ள எடுக்கும் நடவடிக்கையை அமெரிக்கா ஆதரிக்கும்" எனக் கூறினார்.